## நடைபெற உள்ள மழைக்கால கூட்டத் தொடரில் ஒன்றிய அரசு கொண்டுவரவுள்ள

# பிரதமர், முதல்வர், அமைச்சர்களின் பதவியை நீக்கும் புதிய சட்ட திருத்தத்திற்கு மீண்டும் எதிர்ப்பு!

## நாடாளுமன்ற கூட்டுக் குழு 17–ஆம் தேதி இறுதி அறிக்கை தாக்கல்!

புதுடெல்லி, ஜூலை 5

நாடாளுமன்றத்தின் மழைக்கால கூட்டத்தொடர் தொடங்க உள்ள நிலையில் ஒன்றிய அரசு கொண்டு வரவுள்ள 130வது அரசியலமைப்பு சட்ட திருத்த மசோதாவிற்கு எதிராக மீண்டும் எதிர்க் கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

நாடாளுமன்றத்தின் இந்த ஆண்டுக்கான மழைக் கால கூட்டத்தொடர் வரும் 20ம் தேதி தொடங்கி, ஆகஸ்ட் 13–ஆம் தேதி வரை நடைபெற வாய்ப்புள்ள தாகத் தெரிகிறது. இந்தத் தற்காலிக கால அட்ட வணை குறித்த முறையான பரிந்துரை, நாடாளு மன்ற விவகாரங்களுக்கான அமைச் சரவைக் குழு வின் தீவிரப் பரிசீலனை யில் உள்ளது.

இக்குழுவின் ஒப்புதல் கிடைத்தவுடன் இதற்கான அதிகாரப் பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும். சுமார் மூன்று வாரங்கள் நடைபெற உள்ள இந்த மழைக்கால கூட்டத்தொடரில் இரு அவைகளும் மொத்தம் 20 அமர்வுகளாகக் கூடிப் பல்வேறு விவாதங்களை நடத்தத் திட்டமிட்டுள்ளன.

### ஒன்றிய அரசின் மசோதாக்கள்!

இந்தக் கூட்டத்தொடரின் போது, பெண்களுக்கான இடஒதுக்கீட்டை அமல்படுத்துவது தொடர்பான திருத்தப்பட்ட புதிய அரசியலமைப்புச் சட்டத் திருத்த மசோதாவைத் தாக்கல் செய்ய ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளது. முன்னதாக நாடாளுமன்றத்தின் மழைக் கால கூட்டத் தொடரின்போது, 2025ம் ஆண்டு ஆகஸ்ட் 20ம் தேதி லோக்சபாவில் 130வது அரசியலமைப்பு சட்டதிருத்த மசோதாவை ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா தாக்கல் செய்தார்.

இந்த புதிய மசோதாவின்படி. ஐந்து ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட சிறைத் தண்டனை விதிக்கப்படக்கூடிய குற்ற வழக்குகளில் கைது செய்யப்பட்டு, தொடர்ந்து 30 நாட்கள் நீதிமன்றக் காவலில் வைக்கப்படும் பிரதமர், முதல்வர் அல்லது ஒன்றிய மற்றும் மாநில அமைச்சர்களை பதவியில் இருந்து நீக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது.

புதுச்சேரி மற்றும் ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசங்களுக்கும் இதே போன்ற விதிகளைப் பயன்படுத்துவதற்காக மேலும் இரு துணை மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மசோதாவை ஆராய்ந்து வரும் நாடாளுமன்ற கூட் டுக் குழு (ஜேபிசி) தனது இறுதி அறிக்கையை வரும் 17ம் தேதி தாக்கல் செய்ய உள்ளது.

இந்த சட்ட திருத்த மசோதாவுக்கு நாடு முழுவதும் உள்ள எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து மீண்டும் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. இது குறித்து திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் எம்பி சாகரிகா கோஷ் கூறுகையில், ‘இந்த 130வது அரசியலமைப்பு சட்ட திருத்த மசோதா என்பது எதிர்க் கட்சிகளுக்கு எதிராக மோடி அரசு ஏவியுள்ள ஒரு ஏவுகணையாகும். நீதிமன்றத்தால் குற்றவாளி என்று நிரூபிக்கப்படுவதற்கு முன்பாகவே, வெறும் 30 நாட்கள் நீதிமன்றக் காவலில் இருந்தார் என்பதற்காக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பிரதமர் அல்லது முதல் வரை பதவியில் இருந்து நீக்குவது ஜனநாயகத்தின் அடிப்படைக்கே எதிரானது.

### புலனாய்வு அமைப்பு மூலம் எதிர்க்கட்சிகளுக்கு மிரட்டல்!

குற்றம் நிரூபிக்கப்படும் வரை ஒருவர் நிரபராதி என்ற குற்றவியல் சட்டத்தின் அடிப்படை விதியை இந்த மசோதா முற்றிலும் சிதைக்கிறது. தங்களுக்கு அடிபணிந்து செயல்படும் புலனாய்வு அமைப்புகள் மூலம் எதிர்க் கட்சித் தலை வர்களை நீண்ட நாட்கள் காவலில் வைத்து, மாநில அரசுகளைக் கலைக்கவே இந்த சதித் திட்டம் தீட்டப்பட்டுள்ளது’ என்று குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும் ஆம் ஆத்மி கட்சியின் மூத்த தலைவர் சோம்நாத் பாரதி இதுகு றித்து கூறுகையில், ‘ஆளும் பா.ஜ.க. அரசு தங்களுக்கு எதிரான அரசியல் கணக் குகளைத் தீர்த்துக் கொள்ளவும், தங்களின் கொள்கைகளுக்கு அடிபணிய வைக்கவும் அமலாக்கத்துறை, சிபிஐ, வருமான வரித் துறை மற்றும் போலீசார் உள்ளிட்ட தங்களின் கட்டுப்பாட்டில் உள்ள புலனாய்வு அமைப்புகளைத் தவறாகப் பயன்படுத்தி வருகிறது. இதற்கு சிறந்த உதாரணம் அரவிந்த் கெஜ்ரிவால் ஆவார். அவர் எந்த ஆதாரமும் இல்லாமல் கைது செய்யப்பட்டு 6 மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டார்.

இறுதியில் அந்த வழக்கில் எந்த உண்மையும் இல்லை என்று நீதிமன்றம் அவரை விடுவித்தது. இந்த புதிய மசோதா என்பது பாஜக அல்லாத மாநில அரசுகளைக் கவிழ்க்கத் திட்டமிட்டு கொண்டு வரப்படும் ஆபத்தான முயற்சியாகும்’ என்று விமர்சித்துள்ளார்.

இத்தகைய கடுமை யான காரணங்களால் பல எதிர்க்கட்சிகள் இந்த நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் கூட்டங்களைப் புறக்கணித்து வருகின்றன. குற்றம் சாட்டப்பட்டவர் நிரபராதி என்று நிரூபிக்கப்படும் வரை அவர் குற்றமற்றவர் என்ற சட்டத்தின் அடிப்படை உரிமையைப் பறிக்கும் இந்த மசோதா, ஜனநாயகத்தை அடியோடு அழித்துவிடும் என்று எதிர்க்கட்சிகள் அஞ்சுகின்றன.

இந்த மசோதாவில் பிரதமர் பதவியும் சேர்க்கப்பட்டுள்ளது என்பது, இது ஒரு நடுநிலையான சட்டம் போன்ற தோற்றத்தை ஏற்படுத்துவதற்காகச் செய்யப்பட்ட ஒரு தந்திரமான வேலையே தவிர, உண்மையில் இது எதிர்க் கட்சித் தலைவர்களை மட்டுமே குறிவைத்து அழிக்கப் பயன்படும் என்று அவர்கள் எச்சரித்துள்ளனர்.

### எதிர்க்கட்சிகளின் வியூகம்!

அதே நேரத்தில், வரும் மழைக் கால கூட்டத் தொடரின் போது நாட்டில் நிலவி வரும் பணவீக்கம், தேசியத் தேர்வுகளில் நடந்த வினாத்தாள் கசிவு பிரச்சினை, அயோத்தி ராமர் கோயில் நன்கொடை பணம் திருட்டு மற்றும் பிராந்திய பாதுகாப்பு நிலவரங்கள் போன்ற முக்கிய விவகாரங்களை எழுப்பி, ஒன்றிய அரசுக்குக் கடும் நெருக்கடி கொடுக்க எதிர்க்கட்சிகள் தங்களின் வியூகங்களை வகுத்து வருகின்றன.

---

## கொளத்தூர் கிழக்குப் பகுதி - 68 (அ) வட்டக் கழகச் செயலாளர்

# பி.டி.சி.ரவி (எ) எஸ்.சிவக்குமார் இல்லத் திருமண விழா: பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. தலைமை!

## ஆர்.எஸ்.பாரதி - சா.சி.சிவசங்கர் - எஸ்.ஜெகத்ரட்சகன் - கலாநிதி வீராசாமி - இரா.கிரிராஜன் - ப.ரங்கநாதன் பங்கேற்பு!

சென்னை, ஜூலை.5 –

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர், கழகத் தலைவர் மற்றும் தமிழ்நாடு சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல்வாழ்த்துக்களுடன், சென்னை கிழக்கு மாவட்டம், கொளத்தூர் கிழக்குப் பகுதி, 68 (அ) வட்டக் கழகச் செயலாளரும், மாநகரப் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்கத் தலைவர் பி.டி.சி.ரவி (எ) எஸ்.சிவக்குமார் – எஸ்.ஆனந்தி ஆகியோரின் புதல்வர் டாக்டர் எஸ்.சபரிவாசனுக்கும், மதுரை மாவட்டம், கோ. வீரபத்திரன் – கோ.பார்வதி (எ) பவானி ஆகியோரின் புதல்வி டாக்டர் வி. கார்த்திகாராஜம் ஆகியோரின் திரு



மண வரவேற்பு விழா 11.07.2026 – சனிக்கிழமை, மாலை 6.30 மணிக்கு, மணவிழா 12.07.2026 – ஞாயிற்றுக்கிழமை, காலை 9 மணிக்கு மேல், சென்னை, ஜி.கே.எம்.காலனி, பேரறிஞர் அண்ணா திருமண மாளிகையில் நடைபெறுகிறது.

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

கழக அயலக அணித் தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, கழக சட்டத் திருத்தக் குழுச் செயலாளர் இரா.கிரிராஜன் எம்.பி, தலைமை செயற்குழு உறுப்பினர் ப.ரங்கநாதன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கொளத்தூர் கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஐ.சி. எப்.வ.முரளிதரன், கொளத்தூர் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் எ.நாகராசன் எம்.சி, கே.சந்துரு, தேவஜவகர், சி.மகேஷ்குமார், எஸ். பன்னீர்செல்வம் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இவ்விழாவில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சா.சி. சிவசங்கர் எம்.எல்.ஏ. எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி, டி.கே.எஸ்.இளங்கோவன், அன்பகம் கலை, எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ, பா.தாயகம் கவி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தயாநிதி மாறன் எம்.பி, கே.ஆர்.பெரியகருப்பன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் எம்.எல்.ஏ., பி.வில்சன் எம்.பி, முனைவர் கோவி.செழியன் எம்.எல்.ஏ, மேயர் பிரியா ராஜன், மாதவரம் எஸ்.சுதர்சனம், நே.சிற்றரசு எம்.சி, பி.டி.சி. செல்வராஜ், ஆர்.பத்மநாபன், பூச்சி எஸ்.முருகன், துறைமுகம் காஜா, பொன்.தனபால் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

ஜி.சீனிவாசன், ஆர்.மோகனகிருஷ்ணன், ஆர்.செல்வராஜ் (எ) பாபு, பி.சுதர்சன் ஆகியோர் அனைவரையும் வரவேற்கின்றனர்.



சென்னையில் நடைபெற்ற, கவிக்கொண்டல் மா.செங்குட்டுவனின் மகன் வழி பேரன் தி.அ.செம்பியன் – வா.நிவாஸினி இணையரின் திருமண வரவேற்பு விழாவில், சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார்.





